# தேடல்

## வணிகச் சஞ்சிகை

**மலர் - 02 இதழ் - 02**





வணிகத் துறை
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.



ISSN: 2682 -7328

**ஆசிரியர் குழுவிடமிருந்து ................**

கிழக்கு பல்கழைக்கழக வணிக முகாமைத்துவ பீட, வணிகத்துறையினால் தேடல் எனும் இச்செய்தியேடு கடந்த பத்து வருடங்களாக வெளியிடப்பட்டு வருகின்றது. பல்வேறு வேலைப்பழுவிற்கு மத்தியிலும் எமது துறை விரிவுரையாளர்களின் பெரும் ஒத்துழைப்புடன் இரண்டாவது மலரின் இரண்டாவது இதழ் வெளிவருவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வெளியீட்டினூடாக உயர்தர வகுப்பு வணிகத்துறை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பதே எமது நோக்கமாகும். இவ்விதழில் எமது விரிவுரையாளர்களால் எழுதப்பட்ட வணிகம் மற்றும் நடைமுறை விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் அடுத்த வெளியீடுகளிலும் இவ்வாறான கட்டுரைகளும் வணிகச் செய்திகளும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் எமது முயற்சிக்கு உங்களது மிகுந்த ஆதரவுகளையும் நாம் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம்.


**ஆலோசனைக் குழு**

திரு ரெ உதயகுமார்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)

கலாநிதி சு பாலேந்திரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)

திருமதி சு சிறிதரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)

திரு த பரந்தாமன்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)

கலாநிதி ந ராஜேஸ்வரன்
(சிரேஸ்ட விரிவுரையாளர்)



**வெளியீடு**

வணிகத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.



**தொடர்புகள்**

பதிப்பாசிரியர்
திரு தே டினேஷ்
(தகுதிகாண் விரிவுரையாளர்)
வணிகத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | பேண்தகு அபிவிருத்தியில் தனியார் துறையினரின் பங்கு | 01 - 04 |
| 02 | முதலீடு ஒன்றினை மேற்கொள்ளும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் | 05 - 07 |
| 03 | 'COVID – 19' இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள சவால்கள் | 08 - 09 |

# பேண்தகு அபிவிருத்தியில் தனியார் துறையினரின் பங்கு

*திரு சு பாலேந்திரன் (சிரேஸ்ட விரிவுரையாளர்)*
வணிகத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

தற்காலகட்டத்தில் வணிகச்சூழலில் பாரிய மற்றும் நடுத்தர நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மற்றும் அமுல்படுத்தப்படும் திட்டங்கள் என்பன சுற்றாடலை மாசடையச் செய்கின்றன. தற்போது நிறுவனங்களினால் ஏற்படுத்தப்படும் பல்வேறு சுற்றாடல் பாதிப்புக்களினால் பல அழிவுகள் இடம்பெற்றுள்ளன. அதனால், எதிர்கால சந்ததியினர் பாதுகாப்பாக வாழ்வதற்கான சுற்றாடல் ஒன்றை உருவாக்குவது வணிகங்களின் சமூகப் பொறுப்பாகும். இப்பொறுப்பினை பூர்த்தி செய்யும் வகையில் நிலைபேறான சுற்றாடல் கொள்கையொன்று வடிவமைப்பட வேண்டும். நிலைபேறான சுற்றாடல் கொள்கையானது, சுற்றாடலை பாதுகாப்பது மட்டுமல்லாமல் சமூக பொருளாதார செயல்பாடுகளையும் உறுதிப்படுத்தும் வகையில் அமையவேண்டும்.

நிலைபேறான சுற்றாடல் கொள்கையொன்றை வடிவமைத்து அமுல்படுத்துவது ஓர் நாட்டின் அரசாங்கத்தின் பணியாக காணப்படினும், அந்நாட்டில் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற ஒவ்வொரு நிறுவனங்களும் அத்தகைய கொள்கையினை வடிவமைத்து அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அந்த வகையில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒவ்வொரு கொள்கைரீதியான நடவடிக்கைகளிலும் தனியார் துறையினரின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் காணப்படவேண்டும்.

## பேண்தகு சுற்றாடல் கொள்கை

பூகோள அமைவை செயற்கையாக மாற்றுவதற்கு அல்லது பாதிப்புறும் வகையில், சூழல் சமநிலைத் தன்மையில் தாக்கம் செலுத்துவதை சூழல் மாசடைதல் என்றே கருதப்படுகிறது. தற்காலத்தில் இடம்பெறும் பெரும்பாலான மனித செயற்பாடுகள் மூலம் சூழல் கட்டமைப்புக்கு மேற்கொள்ளப்படும் அழிவு அதிகரித்திருக்கின்றது. அதனால், எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான சூழலில் வாழ்வதற்கு உள்ள உரிமையை பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும். பேண்தகு சூழல் கொள்கை என்பது, சூழல் பாதுகாப்பு மட்டுமன்றி, சமநிலையான சமூக, பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வதாகும்.

சூழல் கொள்கை கருத்தியல் மற்றும் வழிமுறைகளை செயற்படுத்தும் போது, அரச நிர்வாகக் கொள்கை கீழ்வரும் வகையில் ஸ்தாபிக்கப்படுதல் மிக முக்கியமானது.

- அரசு, நாட்டின் சூழலை பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும், மீள் கட்டமைக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- நாட்டை அபிவிருத்தி செய்யும் போது, வெறுமனே பொருளாதார அபிவிருத்தியை மட்டுமன்றி, பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- கீழ்வரும் ஒவ்வொரு துறைகளிலும் கொள்கை மற்றும் வழிமுறைகள் ஒன்றோடு ஒன்று இணையும் வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்

**1. கைத்தொழில்**

கைத்தொழில் துறையில் தற்போது இடம்பெறுகின்ற மூலப் பொருளை பயன்படுத்தி, பொருட்களை உற்பத்தி செய்துவிட்டு, கழிவுகளை சுற்றாடலை பாதிக்கும் வகையில் கைவிடுகின்ற கோட்டுப் பொருளாதார முறைக்கு (Liner economy) மாற்றமாக ஒரு கைத்தொழிலின் கழிவுகள், இன்னொரு கைத்தொழிலின் மூலப் பொருளாக பயன்படுத்த முடியுமான சுழற்சிப் பொருளாதார (Circular Economy) வழிமுறையொன்றை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மீள்பாவனை, மீள்சுழற்சி மற்றும் மீள்நோக்கம் (Re-use, recycle, re-purpose) மூலம் சுற்றாடல்சார் கைத்தொழில் வலயங்களை (Eco industrial zones) ஆரம்பித்து, பசுமை பொருளாதாரம் (Green economy) ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**2. கழிவு முகாமைத்துவம்**

அனைத்து மனித செயற்பாடுகளின் மூலம் உருவாக்கப்படுகின்ற ஒரு விடயமாக கழிவுகள் இருக்கின்றன என்பதை நாம் இனங்கண்டுள்ளோம். கழிவுகளை உருவாக்காமல் இருப்பதற்காக மக்களை ஒன்று சேர்ப்பது கழிவு முகாமைத்துவ செயற்பாட்டின் முதன்மையான நடவடிக்கையாக காணப்படுகின்றது. அங்கு கழிவுகளை உருவாக்காமல் இருப்பது மற்றும் கழிவுகள் உருவாக்கப்படும் அளவுகளை குறைப்பதற்கு அவசியமான அனைத்து வழிமுறைகளும் முன்னெடுக்கப்படுவதோடு, சிறுபராயம் முதல் பேண்தகு நுகர்வு எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிளாஸ்டிக் கழிவுகள் சூழலில் கைவிடப்படுவதால், தற்போது இலங்கைக்குரிய மற்றும் சுற்றியுள்ள கடல்பகுதிக்கும், ஆழ்கடலுக்கும் இடம்பெற்றுள்ள பாதிப்புக்களின் மூலம் சமுத்திர வளங்களுக்கு ஏற்படும் அழிவை தடுப்பதற்காக சமுத்திரத்திரத்தை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கைத்தொழில் மற்றும் வீட்டுக் கழிவுகளை வகைப்படுத்தி அகற்றும் நடவடிக்கையை கட்டாயப்படுத்துவதுடன், அதுபற்றிய மக்களின் அறிவை விருத்தி செய்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து, பரவலான பிரசார வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

பல உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து, கழிவு சேகரிப்பு நிலையங்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் வகையிலான கழிவுகளை ஒன்றுசேர்க்கும் இடங்களை ஸ்தாபிப்பதற்கும், முறையற்ற கழிவகற்றல் நடவடிக்கையை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலைகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள், தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் கழிவுகளை அகற்றுவதற்கான உரிய வழிமுறைகளை அமைத்து, பொறுப்பற்ற கழிவகற்றல் முறைமைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3. வளிமண்டலம்

காபன் மற்றும் வாயுக்களை வளிமண்டலத்திற்கு வெளியேற்றுவதை தடுப்பதற்காக அவசியமான கட்டுப்பாட்டு வழிமுறைகளை அறிமுகம் செய்வதோடு, அத்துடன், இயற்கை வாயு மீள்சுழற்சி முறையை மீண்டும் பலப்படுத்துவதற்காக வரிசை மரநடுகை, நகர மரநடுகை முறை, வீதியோர மரநடுகை, முறைகளின் மூலம் பூங்கா மற்றும் வீட்டுப் பயிர்ச் செய்கை முறைகளுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

மின்சார உற்பத்திக்காக பொசில் எரிபொருள் (Posil fuel) பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதன் மூலம் காபன் மயப்படாத (De-carbonization) முறையை துரிதப்படுத்தி, அதன் மூலம் போக்குவரத்து கைத்தொழில் மற்றும் கட்டடங்களை நிர்மாணிக்கும் போது, காபன் மயப்படாத வழிமுறை ஊக்கப்படுத்தப்படும். அத்துடன், காபன் அற்ற (Net Zero) நாட்டை உருவாக்குவதற்கான பொருத்தமான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### 4. சுற்றாடல் கல்வி

வகுப்பறைகளிலும், அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டும், முறைசார் மற்றும் முறைசாரா சுற்றாடல் கல்வியை ஆரம்பம் முதல் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும். சூழல் மீளமைப்பின் மூலம் நடைபெறும் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முயற்சிகளில் (Eco Entrepreneurship) அச்சமற்று பயணிப்பதற்காக பிள்ளைகள் மற்றும்

இளைஞர்களின் மனதை கவரும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

வனப்பாதுகாபப்பு மற்றும் நீர் பாதுகாப்பு , மண்வளப் பாதுகாப்பு , கடற்கரைப் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம், சக்திவலு முகாமைத்துவம், ஒலி முகாமைத்துவம் போன்ற சுற்றாடல் பொறுப்புக்களை பற்றி மக்களின் அறிவை விருத்தி செய்து, அதற்கான மக்களின் பங்களிப்பை உயர்த்துவதற்கான உரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சுற்றாடல் கண்காணிப்பு தொடர்பாக தற்போது நிலவுகின்ற கடினத் தன்மையை நீக்கி, அதற்காக இலகு மற்றும் தெளிவான பொறிமுறைகள் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

# தொழில்நுட்பமயமாகும் சமூதாயம் - இலங்கை நோக்கிய ஓர் பார்வை

*திரு தே டினேஷ் (தகுதிகாண் விரிவுரையாளர்)*
வணிகத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

21ம் நூற்றாண்டானது அறிவு மையமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எந்த தொழிற்துறையாக இருந்தாலும் எதிர்காலத்தில் தொழிநுட்பத்தின் கீழான பொருளாதார பிரிவாக மாறும். 21ஆம் நூற்றாண்டில் முன்னேறிவரும் தொழிநுட்ப உபாய மார்க்கமான முதலீடுகளுக்காகவும் எமது நாட்டின் கல்வி முறையை இணைப்பதற்கும் பொருளாதாரத்துடன் முன்நோக்கிச் செல்லவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கமைய எமது நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பாரிய சமூக, தொடர்பாடல் தொழிநுட்ப கலாசாரத்தை (Culture of Technological Ennovation) கட்டியெழுப்ப வேண்டும். இதற்கமைய தற்காலகட்டத்தில் இலங்கையில் பின்வரும் மாற்றங்களை அவதானிக்கக்கூடிய ஓர் சூழ்நிலை காணப்படுகின்றது.

## 1. சர்வதேச புத்தாக்க மத்திய நிலையம் (Global Innovative Hub)

இணையத்தளத்தை ஒட்டியதாக உருவான உபகரணம் (IoT), செயற்கை நுண்ணறிவு (AI), உயிரியல் தொழிநுட்பம் (Bio Technology), இயந்திர தொழிநுட்பம் (Robotics), ஓக்மென்டட் ரியாலிட்டி (Augmented Reality), நனோ தொழில்நுட்பம் (Nanotechnology) மற்றும் முப்பரிமாண அச்சுத்துறை (3D Printing) போன்றவற்றின் உதவிகொண்டு, சர்வதேச புத்தாக்க மத்திய நிலையத்தை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## 2. மக்கள் மயப்படுத்திய டிஜிட்டல் நிருவாக முறைமை (Citizen Centric Digital Government)

- இதன் கீழ் அரசாங்க பொறிமுறைகள் செயல் திறன் அடையவும், தாமதம், இடமாறி இடம் செல்வதைத் தடுத்தல், சேவையின் பலன், சேவைபெறுநர் சேவை வழங்குநருக்கு அருகில் செல்லாது இணையத்தளத்தின் ஊடாக குறித்த விடயத்திற்காக அனுமதி மற்றும் சேவை பெற்றுக்கொள்வதற்காக முறையை (Transformation of the Public Sector service) அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- புதிய முறை ஊடாக தொழிநுட்ப பயன்பாட்டுக்கு தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, பிறப்புச் சான்றிதழ், மரண சான்றிதழ், சாரதி அனுமதிபத்திரம், அரசாங்க காணி உறுதிபத்திரம் உள்ளிட்ட மக்கள் சேவைகளை திறன்மிக்கதாகவும் விரைவாகவும் செய்துக்கொள்ளக் கூடிய மக்கள் கேந்திர சேவை மக்கள் நிலையம் (Citizen service center) ஒன்பது மாகாணங்களிலும் உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றன.

- வாகன போக்குவரத்து குற்றங்கள் தொடர்பில் அறவிடப்படும் குற்றத் தொகையை இலகுவாகச் செலுத்துவதற்கு டிஜிட்டல் மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறை (Digital & Electronic payment system) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

- ஊழல் அற்ற வினைத்திறன் கூடிய அரச பிரிவுகளில் சகலவற்றையும் கொள்வனவு செய்வதற்கு (E-Procurement) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3. டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இலங்கை (Digitally Inclusive Sri Lanka)

- நாடு தழுவிய அதிவேக / பைபர் (நார் இழை தொழில்நுட்பம்) ஒளியியல் தரவு பரிமாற்ற அமைப்பு (High Speed Optical Transmission System) மற்றும் அதிவேக நடமாடும் 5G Broadband (அகன்ற கற்றை) கட்டமைப்பானது உருவாக்கப்பட இருக்கின்றன.

- நீர் மற்றும் மின்சார பாவனை, வாகன நெரிசல் மற்றும் அனர்த்த நிலைமையின் போது முகாமைத்துவம் செய்வதற்காக டிஜிடல் தொழில்நுட்ப கட்டுப்பாட்டு மத்திய நிலையத்துடன் கூடிய டிஜிட்டல் நகரத்தை உருவாக்கும் (Digital Cities) செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

- சகல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்களுக்காக அலைபேசி மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவு (Mobile and Digital Payment System) முறைக்கு தேவையான வளம் மற்றும் சட்ட ரீதியான கொள்கைகளை உருவாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- சர்வதேச வர்த்தகம், நிதி கொடுக்கல் வாங்கல்களை முற்றாக ஈ-வர்த்தகம் (Cross border E-Commerce and International E-Payment) மூலம் முன்னெடுக்க தேவையான முறையை உருவாக்கவும் மற்றும் அதற்கான சட்ட திட்டங்களை உருவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தரவு பாதுகாப்பு (Data Protection), சைபர் பாதுபாபப் (Cyber Security) மற்றும் அறிவு சார் சொத்து (Intellectual Property) என்பவற்றுக்கு தேவையான சட்டத்திட்டங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4. தகவல் தொழிநுட்ப தொழில் முயற்சிகள் (IT Entrepreneurship)

- வணிக செயன்முறை அயலாக்கம் (Business Process Outsourcing - (BPO) மற்றும் அறிவு செயன்முறை அயலாக்கம் (Knowledge Process Outsourcing (KPO) சேவைகளை 2025ஆம் ஆண்டு மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி பெறுமதியுடன் கூடிய சேவையாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக உப நகரங்களை அண்மித்து தகவல் தொழிநுட்ப நகரத்தை உருவாக்கும் செயற்பாடுகள் (Software Enginee and Programme) முன்னெடுக்கப்படுகின்றன.

- நாட்டில் தற்போதுள்ள மென்பொருள் பொறியியலாளர்களின் எண்ணிக்கையை 2025ஆம் ஆண்டு மூன்று லட்சமாக அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- வெளிநாடுகளில் இருந்து மென்பொருட்களை கொண்டுவருவதற்கு பதிலாக அவற்றை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு தேசிய பொறியியலாளர்களுக்கு மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு தேவையான அனுசரணைகள் வழங்கப்படுகின்றன.

- சர்வதேச சந்தைக்கு ஏற்றதாக மென்பொருளை உருவாக்க வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன.

# ‘COVID – 19’ இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள சவால்கள்

*திருமதி ரா* நிரோஷா *(உதவி விரிவுரையாளர்)*
வணிகத்துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் மறக்க முடியாத ஆண்டாக 2020 காணப்படுகின்றது. சீனாவில் பிறப்பெடுத்த COVID-19 யாரும் எதிர்பார்க்காத வகையில் உயிர்க்கொல்லி வடிவில் உலகம் எங்கும் பரவி பல இலட்ச உயிர்களை காவுகொண்டுள்ளது. வருட தொடக்கத்தில் ஆரம்பித்த இந்நோய் மார்ச் மாத அளவில் இலங்கையில் பரவ ஆரம்பித்தது. நோய் பரவ ஆரம்பித்ததும் பாடசாலைகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அனைத்து விதமான போக்குவரத்தும் முடக்கப்பட்டது.

அன்றாடம் தொழில்புரியும் மக்கள் முதல், மாத வருமானம் பெறும் மக்கள்வரை அனைவரது வாழ்வும் வீட்டிற்குள் முடங்கியது. சுமார் மூன்று முதல் நான்கு மாத காலம்வரை மக்களது வாழ்வாதார செலவு கேள்விக்குறியானது. COVID-19 ஆனது சுகாதார ரீதியில் மட்டும் அல்லாது பொருளாதார ரீதியிலும் இலங்கைக்கு பல சவால்களை உண்டாக்கியது. பணப்பற்றாக்குறை, வேலையின்மை, சீரற்ற வெளிநாட்டு வியாபாரம், தொழிற்சாலைகளின் முடக்கம், பின்னடைவிலான சுற்றுலாத்துறை என்பவை அவற்றுள் பிரதானமானவை.

நாடு ரீதியான முடக்கம், போக்குவரத்துத் தடை, சமூக இடைவெளி என்பன சவால்களை கடினமாக்கியது. இதில் முதலாவதாக குடும்ப வருமானம் என்ற அலகை நோக்கும்போது சுமார் 64 வீதமான மக்களின் வருமானம் குறைவடைந்துள்ளது. மற்றும் 7 வீதமான மக்களின் வருமானம் முற்றாக இல்லாது போயுள்ளது. பாரிய தாக்கத்தை இது ஏற்படுத்தியிருந்தாலும், இது தற்காலிகமான சவாலாகவே உள்ளது. இருப்பினும் துரதிஷ்டவசமாக 3 வீதமான மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

கல்வி, பொழுதுபோக்கு, போக்குவரத்து, சுகாதாரம், கடனை மீள் செலுத்துதல் போன்ற பல்வேறு செலவுகள் ‘COVID-19’ இனால் பல மாதங்கள் ஸ்தம்பித்துப்போயின. மேலும் இக்காலகட்டத்தில் மின்சார செலவு, இணையப்பயன்பாடு, மற்றும் இவற்றிற்கான செலவுகள் அதிகரித்தன. 2 வீதமான மக்கள் சராசரியாக வீடொன்றிற்கு இருபதாயிரம் ரூபா முதல் எழுபதாயிரம் ரூபா வரை நஷ்டப்பட்டுள்ளனர். சேமிப்பு என்பது பல்வாரியாக இல்லாது போனது.

தினக்கூலிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சுராசரியாக 82 வீதமான மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் மாத வருமான அடிப்படையில்

வாழ்பவர்கள். 7 வீதமான மக்கள் நிரந்தரமாக தமது தொழிலை இழந்தனர். இதில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் முச்சக்கரவண்டி சாரதிகள். சுமார் 90 வீதமான சாரதிகள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

பங்குச்சந்தை நிலவரம் தொடக்கத்தில் நிலையற்றக் காணப்பட்ட போதிலும் வைகாசி மாத அளவில் சிறிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. சில பாரிய வெளிநாட்டு முதலீடுகள், பங்குச்சந்தை நிலவரத்தை கட்டுப்பாட்டிற்குள் வைக்க உதவியுள்ளது. இவையெல்லாம் ஒருபுறம் இருக்க இலங்கையின் கட்டுமாணத்துறை, நுகர்வுச்சந்தை, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, வங்கிகள் மற்றும் இலங்கையின் நிதிக்கொள்கைகள் என்பன பெரிதும் பாதிப்படைந்தது.

இலங்கை கட்டுமாணத்துறையை நோக்கும்போது ஏற்கனவே அரசநிதிப் பிரச்சனைகள், கேள்விகள் போதாமல் இருந்தமை என்பவற்றால் பின்னடைவில் இருந்த கட்டுமாணத்தறை அதிக சவால்களை எதிர்கொண்டது. குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுப்பதாக கூறிய வேலைகள் முடியாமல் போனமை, தொழிலாளர் சம்பளப் பிரச்சனை, மூலப்பொருட்களுக்கான செலவுகள் என பல சவால்கள் எழுந்தன.

வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்புக்களற்ற தொழிற்சாலைகளின் வேலைப்பணிகள் ஸ்தம்பித்தம் அடைந்தன. பெரிய அளவிலான வணிகங்கள் நிலையற்ற தன்மையை அடைந்தது. நுகர்வோரின் கேள்விகள் குறைவடைந்தமையினால் நடுநிலை மற்றும் சாதாரண அளவிலான வணிகமும் பல சவால்களை எதிர்நோக்கியது. இந்த ‘COVID-19’ காலகட்டப்பகுதியில் உற்பத்தி அளவானது 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. மக்களின் வாழ்வாதார முறை மாற்றமடைந்துள்ளமையினால் நுகர்வோர் வியாபாரிகள் புதிய முறைகளினை கையாள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றில் பெரிதும் பாதிப்படைந்தது போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை ஆகும். உலக நாடுகள் மற்றும் இலங்கையின் ‘ஊழுஏஐனு-19’ முடக்கத்தால் இலங்கை சுமார் முந்நூறு மில்லியன் நஷ்டத்தை அடைந்துள்ளது. இத்துறையில் வேலை செய்யும் பலர் தொழிலை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். அதிலிருந்து மீள இலங்கை பெரும் இன்னல்களை எதிர்கொள்கின்றது.

இவற்றோடு மட்டும் அல்லாது இலங்கையின் நிதிக்கொள்கையில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வங்கிகள் இன்றளவிலும்கூட சீரான பொருளாதார முறைக்கு மீளவர முடியாமல் உள்ளனர். உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிக விரைவாக ‘COVID-19’ நோயை கட்டுப்படுத்தி உள்ளபோதிலும் ‘COVID-19’ இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள சவால்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் இன்னும் அச்சுறுத்தலாகவே உள்ளன. இருப்பினும் சீரான பொருளாதாரக் கொள்கைகள் மூலம்

நாட்டை மீள கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கை அரசு மக்களுடன் இணைந்து நடாத்தி வருகின்றது